2013 அக்டோபர் 30] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செல்வதைப் பல சாட்சிகள் கண்டுள்ளனர். இரயில் வண்டியில் இப்பெண் அடிபட்டதற்கான அறிகுறிகள் பிரேதப் பரிசோதனையில் காணப்பட்டுள்ளன. இது விபத்து காரணமாக ஏற்பட்டதா அல்லது தற்கொலையா அல்லது வன்முறையினால் நடைபெற்ற மரணமா என்பது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

டி.டி. மருத்துவக் கல்லூரி மாணவர்களை இதர அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் சேர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–50

4. பேரவைமுன் வைக்கப்பட்ட அறிக்கைமீது விவாதம் கோருதல்

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிக்குச் சென்றுவிட்டேன். (குறுக்கீடு) என் அனுமதியில்லாமல் திடீரென்று நீங்கள் raise பண்ண முடியாது. (குறுக்கீடு) அறிக்கை மேசையில் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) விதிகளின்படி நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது, நான் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக்குப்

போய்விட்டேன். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், நீங்கள் உட்காருங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுக்காமல் திடீரென்று எழுந்து கேட்டால், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லாமல் நீங்கள் இப்படியெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடு) நான் ஜவாஹிருல்லாவைப் பேச அழைத்துவிட்டேன். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் அறிக்கையை கிழித்துப் போடவா என்று கேட்கிறார்கள். நீங்கள் எப்படி இதை அனுமதிக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அவைக் குறிப்பில் ஏறாது என்றாலும், அவர் சொன்னதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் செய்வது முறையில்லாத செயல். இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இதற்குமேல் நீங்கள் பேசுவதற்கு அனுமதியில்லை, உட்காருங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இன்று கடைசி நாள்தான். (குறுக்கீடு) இதுசம்பந்தமாக நீங்கள் நோட்டீஸ் கொடுங்கள், நான் பார்க்கிறேன். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருகிறீர்களா அல்லது உங்கள்மீது நடவடிக்கை எடுக்கவா? நீங்கள் உட்காருங்கள், (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.